## ஆடு -மாடு மேய்த்துக்கொண்டே ...1, 155 மார்க் !

### பட்டையக் கிளப்பும் கிராமத்து மின்னல்கள் !




**எ**ல்லாவற்றுக்கும் டியூஷன் , ஸ்பெஷல் கிளாஸ், நினைவாற்றல் பயிற்சி, கம்ப்யூட்டர் லேப் , இன்டர்நெட்... என்று சகல வசதிகளும் நகரத்து மாணவர்களுக்குக் கிடைத்துவிடும் . ஆனால், மரத்தடியில் பாடம் படிக்கும் குக்கிராம பள்ளி மாணவர்களை நினைத்துப் பாருங்கள் ... கஷ்டமோ கஷ்டம்! பள்ளிக்கூடங்கள் மட்டுமல்ல... படிக்க வரும் மாணவர்களின் குடும்பங்களும்கூட பரிதாபம்தான். அப்படியிருந்தும்... சமீபத்தில் வெளியான ப்ளஸ் டூ தேர்வு முடிவில் கிராமத்துப் பள்ளிகளில் வென்று வந்திருக்கும் சில நம்பிக்கை நட்சத்திரங்கள் இங்கே...

மின்சார வசதிகூட இல்லாத வீட்டில் சிம்னி விளக்கில் படித்து சாதித்திருக்கும் மின்மினி... சகுந்தலா. பயோ-மேத்ஸ் குரூப் படித்து 1, 135 மதிப்பெண்கள் பெற்று, கிருஷ்ணகிரி மாவட்ட அரசுப் பள்ளிகள் அளவில் , முதலிடத்தைப் பிடித்திருக்கும் இவர் படித்தது பர்கூர் , அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில்.

"கரன்ட் இல்லைங்கற விஷயத்தை குறையா நினைச்சு , படிப்புல சுணங்கினதில்ல. எப்பவுமே பாடங்கள நிலுவையில வைக்காம , ராத்திரி பதினோரு மணி வரைக்கும் விளக்கு வெளிச்சத்துல படிச்சுட்டுதான் தூங்குவேன். தினமும் ஆறு கிலோ மீட்டர் தூரம் நடந்துதான் ஸ்கூலுக்குப் போவேன். சின்னதா டெய்லர் கடை வச்சுருந்தாலும், படிப்புத் தேவைக்காக நான் கேட்கற பொருட்களை கஷ்டப்பட்டாவது வாங்கிக் கொடுத்த என் அப்பா, அம்மாவும், வீட்டுல நிறைய உதவிகள் செஞ்ச என் தங்கை

கல்யாணியும்தான் நான் இந்த அளவுக்கு மார்க் வாங்க முக்கிய காரணம். பத்தாம் வகுப்புல நான் நல்ல மார்க் வாங்கியிருந்ததால, ஆரம்பத்துல இருந்தே எங்க தலைமை ஆசிரியரும், எல்லா ஆசிரியர்களும் என்னை ஊக்கப்படுத்தினதும் இந்த அளவுக்கு என்னை உயர்த்தியிருக்கு" என்று பெருமைப் பட்ட சகுந்தலா,

"மேற்கொண்டு நல்ல கோர்ஸ்ல சேர்ந்து படிக்கிற அளவுக்கு வீட்டுப் பொருளாதார சூழ்நிலை இல்லை. எங்க வருமானத்துக்கு ஏற்ப அரசு கல்லூரியில ஏதாவது ஒரு டிகிரி முடிச்சுட்டு, சிவில் சர்வீஸ் எக்ஸாம் எழுதி கலெக்டர் ஆகணும்னு திட்டம் வச்சிருக்கேன்!" என்றார் நம்பிக் கை பொங்க.



தனலட்சுமி

**தொ**ழிற்கல்வி பாடப்பிரிவில் தமிழகத்திலேயே முதல் இடத்தைப் பிடித்துள்ள தனலட்சுமி, தேனி மாவட்டம், சக்கம்பட்டி கிராமத்தின் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி. 1,066 மதிப்பெண்கள் பெற்றிருக்கும் தனலட்சுமியின் தந்தை, ஒரு நெசவுத் தொழிலாளி.

"நெசவுத் தொ ழில் செய்ற எங்க குடும்பத்தோட வார வருமானம், 700 ரூபா. எங்க அப்பா, அம்மா, நாங்க மூணு புள்ளைங்கனு எல்லாருக்கும் சாப்பாட்டுக்கே அது போதாதுதான். அப்பறம் எங்க எங்கள படிக்க வைக்கிறது? அதனால, பத்தாவதோட என்னைய பள்ளிக்கூடத்துல இருந்து நிப்பாட்டிட்டாங்க. மூணு வருஷம் கழிச்சு, எங்க ஸ்கூல் முருகேசன் சாரும், மாரிராஜா சாரும்தான் 'நல்லாப் படிக்கற பொண்ண வீட்ல உக்கார வைக்காம ஸ்கூலுக்கு அனுப்புங்க'னு எங்க வீட்டுல எடுத்துச் சொல்லி, ப்ளஸ் ஒன்-ல சேர்த்து விட்டாங்க. அவங்க கொடுத்த பயிற்சியும் ஊக்கமும்தான் முதலிடத்தை எடுக்க வச்சிருக் கு. எங்க சார் அடிக்கடி

சொல்ற ஒரு விஷயம்தான் உத்வேகம் ... 'கிராமம் நகரம்னு எதுவும் கிடையாது. நாம படிக்குற பயிற்சியிலயும் முயற்சியிலயும்தான் இருக்கு 'னு. அதை இப்போ நான் உணர்றேன்.

பேங்க் மேனஜர் ஆகணும்னு ஆசை இருக்கு . ஆனா, இத்தனை நாள் அரசுப் பள்ளியில செலவு இல்லாம படிச்சுட்டேன் . காலேஜ்ல சேர்ந்து படிக்க முடியுமாங்கிறதே சந்தேகமா இருக்கு " எனும்போதே அவர் கண்களைக் கவ்வுகிறது கலக்கம்.



விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் நகரை சேர்ந்த வாணி . மூன்று வயதிலேயே கட்டாயப்படுத்தி பள்ளிக்கு அனுப்பப்படும் குழந்தைகளுக்கு மத்தியில், 7 வயது வரை படிப்பு வாசனையே இல்லாமல், தீப்பெட்டி ஒட்டியவர். அந்த அடிப்படையில் பார்க்கும்போது... அவர் எடுத்திருக்கும் 1, 077 மதிப்பெண்கள் ரொம்பவே மதிப்புமிக்கது!

வாணியின் தாய் ராஜலட்சுமி , "பத்து வருஷத்துக்கு முன்ன என்னையும் , என் மூணு புள்ளைகளையும் அநாதையாக்கி ட்டு வீட்டுக்காரர் இறந்துபோயிட, அதுவரை ஆந்திராவுல இருந்த நாங்க ... பொழப்பு தேடி திருத்தங்கலுக்கு வந்தோம். ஸ்கூலுக்குப் போய்க்கிட்டு இருந்த என் ரெண்டு புள்ளைகள தொடர்ந்து படிக்க வைக்க முடியாத அளவுக்கு வறுமை . அவங்கள ஸ்கூலை விட்டு நிறுத்தினதோட , அப்போ குழந்தையா இருந்த வாணியையும் 7 வயசானதுக்கு அப்பறமும்கூட ஸ்கூல்ல சேர்க்கல . அந்த நேரத்துலதான் தெய்வமா வந்தாங்க குழந்தைத் தொழிலாளர் பள்ளித் தலைமை ஆசிரியை ஜோஸஃபின் மேரி . அவங்கதான் கட்டாயப்படுத்தி என் மகளை ஸ்கூல்ல சேர்த்தாங்க" என்றார் பெருமிதத்தோடு.

தாய்க்கு உதவியாக தீப் பெட்டி ஒட்டிக்கொண்டே நம்மிடம் பேசினார்

வாணி. “1,500 தீப்பெட்டி (ஒரு கட்டு தாள்) ஒட்டினாதான், அம்மாவுக்கு 7 ரூபாய் கூலி கிடைக்கும் . நாள் பூரா ஒட்டினாலும் 4 கட்டுக்கு மேல முடியுறதில்ல. அப்படியிருக்கறப்ப, நாம நெனச்ச கோர்ஸ்ல எப்படி சேரமுடியும்? இப்ப, கம்ப்யூட்டர் சயின்ஸ் குரூப் எடுத்துப் படிச்சுருக்கேன். இன்ஜினீயரிங் படிக்கணும்னு ஆசை . ஆனா, அம்மாவைக் கஷ்டப்படுத்த வேண்டாம்னு பி.எஸ்சி. கணிதம் படிக்க நினைக்கிறேன் . ஆனா, அதுக்கு அப்ளிகேஷன் வாங்கக்கூட எங்ககிட்ட பணம் கிடையாது . குடும்பத்தோட முதல் பட்டதாரியை அரசே தன் செலவுல படிக்க வைக்கும்னு அரசாணை வந்திருக்கறதா டீச்சர்ஸ் சொன்னாங்க . அப்படி எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைச்சா, எங்க குடும்பத்துக்கே வெளிச்சம் கிடைக்கும் !" என்று எதிர்பார்ப்பைச் சொன்னார் வாணி.

களையெடுக்கும் கூலி வேலைக்காக கிளம்பிக் கொண்டு இருந்த ஜெயலட்சுமி... 1,155 மதிப்பெண்களோடு காமர்ஸ் குரூப்பில் மாநிலத்தில் முதலிடம் பிடித்திருக்கும் பெரம்பலூர், தனலட்சுமி- சீனிவாசன் மேல்நிலைப்பள்ளி மாணவி . இரண்டு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கியிருப்பதும் இவருடைய இன்னுமொரு சாதனை.

"நான் சின்னப்புள்ளயா இருந்தப்பவே எங்கப்பா இறந்துட்டார். அம்மா, ரெண்டு அண்ணன் , ரெண்டு தம்பி எல்லோருமே விவசாயக்கூலி வேலைக்குதான் போறாங்க . வீட்டு வேலை , ஆடு,மாடு பட்டி வேலைகள செஞ்சுட்டே படிச்சேன் . என் மேல நம்பிக்கை வச்சு , 22 கி.மீ. தூரத்துல இருக்கற ஸ்கூல்ல என்னை சேர்த்து விட்டாங்க எங்க அண்ணன் . காலையில ஏழரைக்கு பஸ் ஏறினா, சாயந்திரம் ஆறு மணிக்குதான் வீடு திரும்புவேன். வீட்டு வேலை செஞ்ச அலுப்புல நைட் சீக்கிரமே தூங்கினாலும், நாள் தவறாம காலையில மூணு மணிக்கே எழுந்து படிக்க ஆரம்பிச்சுடுவேன். லீவு நாள்ல வயல் வேலைக்குப் போவேன் . வறுமையிலயும் வைராக்கியத்தோட படிச்ச என் படிப்புக்கு பலன் கிடைச்சுடுச்சு" என்றார் ஜெயலட்சுமி சந்தோஷம் பொங்க.

இவருடைய கனவு... 'சார்ட்டட் அக்கவுன்டன்ட்' ஆவது. படித்த பள்ளிக்கே பெருமை தேடித்தந்திருப்பதால், அதை நனவாக்க , அவர் படித்த பள்ளி சார்ந்த கல்வி குழுமமே இலவச பி.காம். படிப்புக்கு 'ஓகே' சொல்லியிருக்கிறதாம்.

இதை பூரிப்போடு சொன்ன ஜெயலட்சுமி , வாழ்வின் இடர்களை களையெடுக்கப்போகும் நம்பிக்கையுடன் கூலி வேலைக்கு களைவெட்டியுடன் கிளம்பினார்!